# சீக்கிய குருதுவாராவின் லங்கரும் வள்ளலாரின் தர்மசாலையும்

# Sikhiya Gurudwaravin Langarum Vallalarin Dharmashalayum

**முனைவர் மா. பாண்டீஸ்வரி**
உதவிப்பேராசிரியர்
தமிழ்த்துறைத் தலைவர்
அரசு மகளிர் கலைக் கல்லூரி
நிலக்கோட்டை

**Dr. M. Pandeeswari**
*Assistant Professor*
*Head of Departement*
*Government Arts College for Women*
*Nilakottai*

## ஆய்வுச் சுருக்கம்

*வள்ளலார் தமிழ்நாட்டில் வாழ்ந்த காலம் ஆன்மீக ஏடுகளில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஓர் பொற்காலமாகும். அவரது சமரச சுத்தசன்மார்க்கம் பல நூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட கருத்தாகும். அவரிர் ஏற்படுத்தியதருமசாலை வடலூரில் அணையா அடுப்பாகத் திகழ்ந்து வருகிறது. இதே போன்று பஞ்சாபில் அமிர்தசரஸ்* (Amritsar) *என்றவுடன் பொற்கோவில் நினைவுக்கு வருகிறது. சத்திய ஞானசபையைப் போன்று பொற்கோவில் அமைந்துள்ளது. இது சீக்கியரிர்களின் புனிதத் தலமாகும். இந்த இரு தலங்களிலும் லங்கரும் இதரும சாலையும் ஓரு பகுதியாக அமைந்திருப்பது முக்கிய அம்சமாகும். சீக்கிய மதத்தைத் தோற்று வித்த குருநானக்கும், ஞானசபையைத் தோற்று வித்த வள்ளலாரும் மக்களிடையே மக்களாக வாழ்ந்து நல்ல வழிமுறைகளை வகுத்துக் காட்டிய ஞானிகளின் சமயங்களில் உலக வாழ்க்கை வெறுக்கப்படவில்லை. மாறாக இல்லற வாழ்வும், ஆன்மீக வாழ்வும் ஓன்று என்பதை நிருப்பித்துக் காட்டியுள்ளார்கள். இருபெரும் சமூக அக்கறை கொண்ட சமயங்களில் "பொது உணவு முறை" எவ்வாறு அமைந்து காணப்படுகின்றது என்பதை ஆய்வு நோக்குடன் நேரில் சென்று வந்த கருத்துக்களை இக்கட்டுரையில் பகிர்ந்து கொள்கிறேன்.*

***முக்கியச்சொற்கள்:*** *வள்ளலார், பொற்கோவில், இல்லற வாழ்வு, ஆன்மீகவாழ்வு, சீக்கியகுருது வாரா, குருநானக*

## Abstract

*The period during which Vallalar lived in Tamil Nadu was a golden age to be inscribed in golden letters in the spiritual books. His samarasa suddha sanmarga is a concept dating back several hundred years and the dharmasalai he founded has been an unquenchable stove in Vadalur. Similarly, in The Punjab, the Golden Temple is remembered as Amritsar (UAsavilayasa). It is a holy place for the Sikhs. The main feature is that the langar on one side and Dharma sala on the other side of the of the road. Worldly life is not hated at the time of Guru Nanak, the founder of Sikhism, and the founder of the Jnana Sabha, who lived as people among the people and laid down good ways. On the contrary, they have demonstrated that domestic life and spiritual life are one and the same. In this article, I will share the views that I have personally visited with the aim of examining how the "common food system" exists in the two great socially concerned periods*

***Keywords:*** *Vallalar, Golden Temple, Domestic Life, Spiritual Life, Sikh Gurudwara, Guru Nanak.*

**Citation**

Pandeeswari, M. "Sikhiya Gurudwaravin Langarum Vallalarin Dharmashalayum." *Journal of Tamil Culture and Literature*, vol. 3, no. 1, 2023, pp. 32–39.

**DOI**: *https://doi.org/ 10.5281/zenodo.20117990*

**முன்னுரை**

*வள்ளலார் தமிழ்நாட்டில் வாழ்ந்த காலம் ஆன்மீக ஏடுகளில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஓர் பொற்காலமாகும். அவரது சமரசசுத்த சன்மார்க்கம் பல நூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட கருத்தாகும். அவர் ஏற்படுத்தியதருமசாலை வடலூரில் அணையா அடுப்பாகத் திகழ்ந்து வருகிறது. இதே போன்று பஞ்சாபில் அமிர்தசரஸ்* (Amritsar)*என்றவுடன் பொற்கோவில் நினைவுக்கு வருகிறது. சத்திய ஞானசபையைப் போன்று பொற்கோவில் அமைந்துள்ளது. இது சீக்கியர்களின் புனிதத் தலமாகும். இந்த இரு தலங்களிலும் லங்கரும் இதரும சாலையும் ஒரு பகுதியாக அமைந்திருப்பது முக்கிய அம்சமாகும். சீக்கிய மதத்தைத் தோற்றுவித்த குருநானக்கும், ஞானசபையைத் தோற்றுவித்த வள்ளலாரும் மக்களிடையே மக்களாக வாழ்ந்து நல்ல வழிமுறைகளை வகுத்துக் காட்டிய ஞானிகளின் சமயங்களில் உலக வாழ்க்கை வெறுக்கப்படவில்லை. மாறாக இல்லற வாழ்வும், ஆன்மீக வாழ்வும் ஒன்று என்பதை நிருப்பித்துக்காட்டியுள்ளார்கள். இருபெரும் சமூக அக்கறை கொண்ட சமயங்களில் "பொது உணவு முறை" எவ்வாறு அமைந்து காணப்படுகின்றது என்பதை ஆய்வு நோக்குடன் நேரில் சென்று வந்த கருத்துக்களை இக்கட்டுரையில் பகிர்ந்துகொள்கிறேன்.*

**குருநானக்கும் வள்ளலாரும்**

*வள்ளலார் பிறவி துறவி என்றாலும் நாட்டைக் கடந்து, காட்டை சரண் அடை-யும் சந்நியாசம் வழி புகுந்தவரல்லரிர். மக்களிடையே வாழ்ந்து உலகில் வாழ்ந்து நல்ல வழி முறைகளை வகுத்துக்காட்டிய ஞானி. குருநானக்கும் மக்களிடையே மக்களாக வாழ்ந்தவரிர் அவர் துறவி இல்லை. மாறாக இல்லறத்தில் இருந்து கொண்டே ஆன்மீக வாழ்க்கையில் ஈடுபட்டு மக்களுக்கு நல்ல வழி முறையை வகுத்துக்காட்டியவர். வள்ளலாரும் குருநானக்கும் உலக வாழ்க்கையை வெறுக்கவில்ளைல. உடல் நிலையாமை என்ற கருத்தை ஏற்காது மறுத்தனரிர். **காயமே இது பொய்யடா** என உடம்பை இகழ்ந்துரைக்காது உடலைப் போற்றிப் புகழ்ந்துள்ளனரிர். வள்ளலார் நோயற்ற வாழ்வில் நான் வாழ வேண்டும் என்றும் மரணமில்லாப் பெருவாழ்வு வாழ்ந்திட வேண்டும் என்று நீண்ட ஆயுட்கான நித்திய நெறிமுறைகளை எடுத்துக்காட்டியவரிர்.*

> ***"சமய உலகில் ஓர் புரட்சியும்***
> ***இறை நிலத்தில் ஒரு மறுமலரிர்ச்சியும் கண்டவரிர்கள்"***

*வள்ளலாரும் குருநானக்கும் ஆவார்கள். பொதுவாக உலகில் யாராவது பசியோடு இருந்தால் அதைக் கண்டு நம் உள்ளம் பதைக்கமாட்டோம். நீடித்த பிணியால் வருந்தினால் அதைக் கண்டு உள்ளம் வருந்தமாட்டோம். ஏழைகளைக் கண்டால் அதற்காக இரக்கப்பட மாட்டோம். ஆனால் வள்ளலார், குருநானக் ஆகிய இருவரும் வருந்தி பாடியப் பாடல்கள் புனித நூல்களில் காணப்படுகின்றன. வள்ளலாரின் உலகம் குறித்த அக்கறை அவரது இறைக்கொள்கையிலும் சிவகாருண்ய கொள்கையிலும் நிறைந்து காணப்படுகிறது. சீக்கியத்தில் குருநானக்கால் தோறறுவிக்கப்பட்ட லங்கரிர் தரிர்மசாலை என்றுதான் ஆரம்பத்தில் இருந்தது. இந்த தர்மசாலையே முதல் சீக்கிய கோயில் உருவானதாக சீக்கியரிர்கள் குறிப்பிடுகின்றனரிர்.*

**குருதுவாரா**

*குருதுவாரா என்பது சீக்கியரிர்களின் புனிதமான இடமாகும். இங்கு தான் சீக்கிய குருமார்கள் இயற்றியுள்ள குருகிரந்த சாகிப் உள்ளது. குருதுவாரா என்பது* ***குருவின் இருப்பிடம்*** *என்றும் சீக்கியரிர்களால் குறிப்பிடப்படுவதுண்டு. இந்தகுருதுவாரவில் ஏற்றத்தாழ்வின்றி, சாதி வேறுபாடின்றி அனைவரும் இறைவனை வழிப்பட்டுச் செல்கின்றனரிர். குருநானக் முதல் குருகோவிந்த சிங் வரை பத்துகுருமார்கள் எந்த எந்த இடங்களுக்கு சென்றார்களோ அந்த இடங்கள் எல்லாம் புனிதமான இடங்களாக சீக்கியரிர்களால் போற்றப்படுகின்றன. இந்த இடங்களில் எல்லாம் சீக்கியரிர்கள் குருதுவாராக்களை நிறுவினரிர். அதாவது,*

***"என் சத்குரு எங்கு சென்றுதங்கினாரோ***
***அந்த இடம் ராம்ராஜ்யத்தைப் போன்று***
***மகிழ்ச்சியாய்இருக்கும்" (கு.கி : 450)***

*என்று குருகிரந்த சாகிப்பில் குறிப்பிட்டப்பட்டுள்ளது. இதே போன்று பாய்குருதாஸ் என்ற சீடரிர் குருநானக்தங்கியிருந்த இடம் பற்றி குறிப்பிடும்பொழுது,*

***"குருநானக்கின் திருவடிகள் எங்கு பதியப்பட்டதோ***
***அந்த இடம் வணங்குவதற்கு உரியது" (கு.கி : 1-17)***

*குருதுவாராக்கள் இந்தியாவில் மட்டுமல்லாது பிற வெளி நாடுகளிலும் நிறுவப்பெற்றுள்ளன. சீக்கியர்கள் எங்கெல்லாம் குடியேறுகிறார்களோ அங்கெல்லாம் கட்டாயம் குருதுவார இடம்பெறும். குருநானக் காலம் முதல் ஐந்தாம் குருவான* ***குருஅர்ஜீன் தேவ்*** *காலம் வரை குருதுவாராக்கள் தருமசாலைகளாகக் கருதப்பட்டன. சீக்கியரிர்களின் குருதுவாரா சமயக் கண்ணோட்டத்துடன் மட்டுமல்லாது, மாணவரிர்களுக்கு கல்விக்கூடமாகவும், நோயுற்றவரிர்களுக்கு ஓய்விடமாகவும், சீடரிர்களுக்கும் பொதுமக்களுக்கும் உணவகமாகவும், பெண்களுக்கு பாதுகாப்பு கோட்டையாகவும் சிறப்புப் பெற்றுத் திகழ்கின்றன.*

**குருதுவாராவில் குருகிரந்த வழிபாடு**

*சீக்கியரிர்கள் வழிபடும் குருகிரந்த சாகிப்பிற்கு* ***வாழும் குரு*** *என்று பெயர். சீக்கிய சமயத்தில் பத்து குருமார்களுக்குப் பின் குரு என்று யாரும் தேரிர்வு செய்யப்படவில்லை. பத்து குருமார்களுக்குப் பின் குருகிரந்தமே குருவாக உள்ளது. இதனால்தான் குருகிரந்தத்தை வாழும் குருவாக நினைத்து சீக்கியரிர்கள் வணங்குகின்றனரிர்.*

***லங்கரிர் (Langar- பொது உணவு சாலை)***

*குருதுவாராவிற்கு உள்ளே நிறுவன அமைப்பாக லங்கரிர் என்ற அமைப்பு உள்ளது. இந்த அமைப்பு பொது உணவகமாகும். இரவும் பகலும் இந்த உணவகம் தொடரிர்ந்து செயல்பட்டு வருகிறது. நம்ம ஊர்கல்யாண மண்டபத்தையெல்லாம் விட மிகப் பெரிதாகக் கட்டப்பட்டுள்ளது இந்த லங்கரிர் நிறுவனம். ஓரே பந்தியில் அதிக மக்கள் அமரிர்ந்து உணவு உண்ணக் கூடிய இடமாக லங்கரிர் அமைக்கப்பட்டுள்ளது. அதாவது மிகப் பெரிய சமையலறை, சாதி, மதம், இனப்பாகுபாடு இன்றி யார் வேண்டுமானாலும் பசித்த நேரத்தில் இங்கு வந்து உணவு அருந்திச் செல்லலாம் (நான் அமிர்தசரஸில் உள்ள லங்கரில் உணவு அருந்தியுள்ளேன்). லங்கரில் சேவை செய்வதற்கு சீக்கியரிர்கள் போட்டி போட்டுக் கொண்டு செய்கின்றார்கள். நாம் சாப்பிடும் தட்டை கூட சுத்தம் செய்வதற்கு நாம் சங்கடப்பட்டுக்கொள்கிறோம்.*

*ஆனால் லங்கரில் சாப்பிட்ட தட்டை வாங்கி சுத்தம் செய்கின்றனரிர். இதையெல்லாம் நேரிடையாகப் பார்க்கின்ற பொழுது அவரிர்களது உயரிர்ந்த எண்ணம் கொண்ட சேவை அவரிர்களிடைய உயரிர்வாக உயரிர்ந்து நிற்கிறது. நமது காலணிகளை வாங்கும் போது பணிவாகத்தான் வாங்குகின்றார்கள். அவரிர்களேவாங்கி துடைத்து வைக்கின்றனரிர். அதற்கென்று தனியாக ஆட்கள் இல்லை. யார்வேண்டுமானாலும் முன் வந்து இந்த சேவையை செய்கின்றனரிர். உண்மையிலே இவரிர்களுக்குத் தான் இறையருள் கிடைக்கும் என்று நான் நினைத்துக்கொண்டேன்.* ***(அமிர்தசரஸில் உள்ள பொற்கோயிலுக்கு நேரில் சென்று பார்த்தது).***

***"ஏழைகளுக்குச் செய்யும் தொண்டே இறைவனுக்கு செய்யும் தொண்டு"*** *என்று பெரியோர்கள் கூறுவதுண்டு. இதை சீக்கியரிர்கள் பொற்கோவிலில் இன வேறுபாடின்றி இறைவனுக்கு செய்யும் தொண்டாக செய்து வருகின்றனரிர்.*

**பொற்கோவிலில் பொது சமையலறை**

*சீக்கிய சமயத்தில் லங்கரிர் என்ற அமைப்பு முக்கிய அங்கமாக விளங்குகின்றது.* ***"கரிர்த்தாப்புரில் குருநானக் தங்கியிருக்கும் போது அவரைக் காண வந்தவரிர்களுக்கு உணவு வழங்கினார்.இதுதான் லங்கரின் ஆரம்பம்' என்று சொல்லப்படுகின்றது"[1].*** *தன் முதலில் சூபி மதத்தைச் சேரிர்ந்த* ***பாபாஃபரீத்*** *என்பவரிர் பொது உணவகத்தைத் தோற்றுவித்துள்ளார். அதனைத் தொடரிர்ந்துதான் சீக்கிய மதத்தைத் தோற்றுவித்த குருநானக் குருதுவாராக்களில்' பொது உணவு முறையை நடைமுறைப்படுத்தியுள்ளார்"[2] என்பது குறிப்பிடத்தக்கது.*

*சாதி, மதம், மொழி, ஆண், பெண், வயது, ஏழை, பணக்காரரிர் என்ற எந்த பாகுபாடும் இல்லாமல் அனைவரும் சரிசமமாக தரையில் அமரிர்ந்து உணவு உண்ண வேண்டும் என்பது தான் குருநானக்கின் எண்ணமாக இருந்துள்ளது. "****மூன்றாவது குருவான குரு*** *அமரிர்தாஸ் தன்னைக் காண வருபவரிர்களுக்கு உணவு கொடுப்பதைத் தொடரிர்ந்து செய்தார். மூன்றாவது குருவைத் தொடரிர்ந்து வந்த குருமார்கள் அனைவரும் உணவு அளிக்கும் முறையைத் தொடரிர்ந்து செய்து வந்துள்ளார்"[3], குறிப்பாக ஐந்தாவது குருவான* ***குருஅர்ஜீன் தேவ்*** *காலத்தில் குருதுவாராவில் உணவு அளிக்கும் முறை நிலையானதாக இருந்தது. காரணம் சீக்கியாகளுக்கு எனத் தனியான இடம் அமைந்திருந்ததால் அவை முறையாகச் செயல்பட்டு வந்துள்ளன. இவ்வாறு தான் சீக்கியத்தில்* ***லங்கர்*** *என்ற பொது சமையலறை அமைப்பு முறை உருவாகியது. பொது*

*சமையலறை என்பது* **'community kitchan'** *என்பதாகும்.* ***"அக்பரிர் இந்த பொதுசமையலறையில் உணவு அருந்தியதாக"[4]*** *சீக்கிய வரலாற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. தினமும் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்டவரிர்கள் பொற்கோவிலில் உணவு உண்கின்றனரிர். பண்டிகைக் காலங்களில் எண்ணிக்கை இன்னும் அதிகரிக்கும் என்று சீக்கியரிர்கள் தெரிவிக்கின்றனர். தினமும் 1500 கிலோ அரிசி உணவு தயாரிக்கப்படுகிறது. 2000 கிலோ காய்கறிகள் பயன்படுத்தி சமைக்கின்றனரிர். 12000 கிலோ கோதுமை மாவு பயன்படுத்தி சப்பாத்திகள் தயாரிக்கின்றனரிர். 13 ஆயிரம் கிலோ பருப்புக்கள் கொண்டு சாம்பார் செய்யப்படுகிறது. இந்த பொது உணவகத்தில் ஓரே நேரத்தில் 5 ஆயிரம் பேரிர் உணவு உண்ணக் கூடிய வகையில் இடம் உள்ளது. நாள் ஒன்றுக்கு 3 இலட்சம் தட்டுகள், டம்ளரிர்கள் தூய்மையான முறையில் சுத்தம் செய்யப்படுகின்றன. "உலகின் மிகப் பெரிய சமையலறை*

*இதுதான் என்றும் இதனை குருகா லங்கரிர்* **(guru khalangar)**"[5] *என்றும் சீக்கிய வரலாற்றில் அழைக்கப்படுவதுண்டு.*

**சத்திய தரிர்மசாலை**

*சமரச சுத்த சன்மார்க்க சத்திய தரிர்மசாலையை 1867 -ல் வள்ளலார் வடலுரில் நிறுவியுள்ளரிர். இது அவரது முதல் கடமையாகப் பசி தீர்த்தலையும், அதற்கு அடுத்த நிலையில் உயிர் துன்பங்களைப் போக்குவதையும் நோக்கமாகக் கொண்டு தருமசாலை இயங்கி வருகின்றது. வயிற்றுப் பசியினால் இருக்கும் ஒருவனால் எப்படி ஆன்ம ஈடேற்றம் குறித்து சிந்திக்க முடியும்? மனிதனின் பல்வேறு அடிப்படைத் துன்பங்கள் போக்கப்பட்டால் அவனால் இறைவனைப் பற்றி சிந்திக்க முடியும் என்ற தத்துவத்தை வள்ளலார் தமது சமயத்தில் நிலை நிறுத்தியுள்ளார். மேலும், எல்லாச் சமயத்தாருக்கும் பொதுவாக "அருட்பெருஞ் சோதி வழிபாட்டினை" வடலூரில் ஏற்படுத்தினார். அதற்கு சமரச சுத்தசன்மார்க்க சத்தியஞானசபை என்று பெயர். இவ்வழிபாட்டில் சாதி, மத, இன வேறுபாடின்றி வழிபடும் பொது வழிபாட்டுத் தலமாகவும் இருந்து வருகிறது. உலக மக்களின் பசித்துயரம் பற்றிய விரிவான கருத்துக்கள் வள்ளலாரின் எழுத்துக்களில் காணப்படுகின்றன. பசியுடன் இருக்கும் மனிதனின் அன்பும் அறிவும் விளக்கம் பெற முடியாது என்பதனை வள்ளலார் மிக வலிமையுடன் எடுத்துக்காட்டுகின்றார். இந்த உண்மையை அவர் ஆழமாக ஏற்றுக்கொண்டதனாலேயே பசி நீக்குதலை அவரது தத்துவத்தின் முதல் கோட்பாடாக வைத்துள்ளார். இதனை,*

***"மண்ணுலகிலே உயிர்கள் தாம் வருந்தும் வருத்தத்தை***
***ஒரு சிறிது எனினும்***
***கண்ணுறப் பார்த்தும் செவியுறக் கேட்டும்***
***கணமும் நான் சகித்திடமாட்டேன்"*** ***(பிள்ளைச் சிறு விண்ணப்பம் : 23)***

*என்று குறிப்பிடுகின்றார்.*

**சத்திய தருமசாலையின் நோக்கம்**

*தருமசாலை தொடங்கிய நாள் (23.05.1867) அன்று ஆயிரக்கணக்கானவரிர்களுக்கு உணவு வழங்கப்பட்டுள்ளது. அன்று ஏற்றப்பட்ட அடுப்பானது எப்பொழுதும் புகைந்து இருக்க வேண்டும் என்பதற்காக அப்பணியானது தடைபடாமல் இன்று வரை தொடரிர்ந்து நடைபெற்று வருகிறது.* ***"தானத்திலே சிறந்த தானம் அன்னதானம்"*** *என்பர் பெரியோர். அந்த வாக்கினை மெய்ப்பிக்கும் வகையில் அன்று வள்ளலாரால் ஏற்றி வைக்கப்பட்ட திருவிளக்கு இன்றும் அணையாது எரிந்து வருகிறது. அதாவது, அடுப்பையும் ஏற்றி விளக்கையும் வழிபடவும் பசியாற்றவும் வழிவகை செய்துள்ளார். அவரால் நிறுவப்பட்ட தருமசாலை சரியாக 155 ஆண்டுகளாகத் தொடரிர்ந்து விளங்கி செயல்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. ஒரு முறை கடலூரில் தன் அன்பரிர்களிடம் பேசும் போது போவோர் வருவோர்களுக்குப் பசிதீர்க்க ஒரு தருமசாலை அமைக்க வேண்டும் என்று கூறிய செய்தி ஜீவகாருண்ய ஒழுக்க நூலில் கூறப்பட்டுள்ளது. "பசியினால் வருந்துகின்றவரிர்கள் எந்தத் தேசத்தாராயினும், எந்த சமயத்தாராயினும், செய்கையாராயினும், எந்த சாதியாராயினும் அவரிர்கள் தேச ஒழுக்கம், சமய ஒழுக்கம், சாதி ஒழுக்கம், செய்கையொழுக்கம் முதலானவைகளைப் போதித்து விசாரியாமல் எல்லாச் சீவரிர்களிடத்திலும் கடவுள் விளக்கம் பொதுவாய் விளங்குவதை அறிந்து, பொதுவாகப் பார்த்து அவரவரிர் ஒழுக்கத்துக்குத்தக்கபடி அவர்கள் பசியை நிவரிர்த்திப்பதே ஜீவகாருண்யம்"[6] என்று கூறியுள்ளார். மேலும், வள்ளலார்*

*"பசியென்கிற நெருப்பானது ஏழைகள் தேகத்தினுள் பற்றி*
*எரிகின்ற போது ஆகாரத்தால் அவிக்கின்றது தான் - ஜீவகாருண்யம்"*

*"பசியென்ற விஷக்காற்றானது ஏழைகள் அறிவாகிய விளக்கை அவிக்கின்ற*
*தருணத்தில் ஆகாரங் கொடுத்து அவியாமல் ஏற்றுகின்றதே - ஜீவகாருண்யம்"*

*"பசியென்கிற புலியானது ஏழை உயிர்களைப் பாய்ந்து*
*கொல்லத் தொடங்குவதற்குள் தருணத்தில்*
*அப்புலியைக் கொன்று அவ்வுயிரை இரட்சிப்பதே - ஜீவகாருண்யம்"*

*"பசியென்கிற விஷம் தலைக்கேறி ஜீவன் மயங்கும்*
*தருணத்தில் ஆகாரத்தால் அவ்விஷத்தை இறக்கி*
*மயக்கம் தெளியச் செய்வதே - ஜீவகாருண்யம்"*

*"பசியென்கிற கொடுமையாகிய தேள் வயிற்றில் புகுந்து*
*கொட்டுகின்ற போது கடுப்பேறிக் கலங்குகின்ற ஏழைகளுக்கு*
*ஆகாரத்தால் அக்கடுப்பை மாற்றி கலக்கத்தை தீர்ப்பதே - ஜீவகாருண்யம்"*

*"நடந்து நடந்து காலுஞ் சோர்ந்து கேட்டுக் கேட்டு வாயுஞ் சோர்ந்து நினைந்து நினைந்து மனமும் சோர்ந்து, இனி இப்பாவி வாயிற்றுக்கென்ன செய்வோம் என்று கண்ணீர் வடிக்கின்ற ஏழைகளுக்கு ஆகாரங் கொடுத்து கண்ணீரை மாற்றுவதே -ஜீவகாருண்யம்"[7] என்கிறார் வள்ளலார். தருமசாலையின் நோக்கமே பசி போக்குதல் என்ற அடிப்படைத் தத்துவமாக வள்ளலாரின் எழுத்துக்களில் காணப்படுகின்றது.*

**முடிவுரை**

*காலத்தாலும், மொழியாலும், பிரதேசத்தாலும் வள்ளலார் நெறியும், குருநானக் கொள்கையும் வெவ்வேறாக இருந்தாலும் இரு சமயத்தில் உள்ள சமூக அக்கறையின் பண்பு நிலைகள் ஒத்த கருத்துடையதாகவே அமைந்துள்ளது. தருமசாலையின் உள்ளே அன்று முதல் இன்று வரை வள்ளலார் மூட்டிய அடுப்பில் அணையாது 24 மணி நேரமும் அல்லும், பகலும் உணவு வழங்கப்பட்டு வருகிறது. இது தமிழ்நாட்டில் மற்றெங்கும் காணாத தனிச்சிறப்பாகும். இதே போன்று சீக்கிய குருதுவாராவில் குருநானக்கால் ஏற்படுத்திய லங்கரிர் அமைப்பில் எல்லோருக்கும் 24 மணி நேரமும் உணவு வழங்கப்பட்டு வருகிறது. இது சீக்கியத்தில் காணப்படும் தனிச்சிறப்பாகும். இது போன்று ஆய்வுகளை ஒப்பீட்டு நோக்கில் ஆராய்ந்தால் பல் சமயச் சூழல் சமத்துவத்திற்கு சிறப்பாக இட்டுச் செல்லும் என்பதை நான் உறுதியாக கூறுகின்றேன்.*

**அடிக்குறிப்புகள்**

1. Parkashsingh community kitchen of the sikhs, 1994, Page.no-55.
2. *மேலது.*
3. *மேலது.*
4. *மேலது.*
5. *மேலது.*

6. ***புரசு பாலகிருஸ்ணன், ஞானக்கவி ராமலிங்கரிர்*** *நேசனல் புக் டிரஸ்ட், இந்தியா 1996, ப. 75*

7. ***ஜீவகாருண்ய ஒழுக்கம்,*** *அருட்திரு. இராமலிங்க அடிகளார் 1965, (பக். 30-31)*

**References**

1. Parkashsingh community Kitchen of the Sikhs, 1994, P.55.
2. Purasu Balakrishnan, Gnanakavi Raa Malinga, National Book Trust, India, 1996, P. 75.
3. Fr. Thiru. Ramalinga Adigalar, Jivakarunya Discipline, 1965, pp. 30-31